ஸ்டாண்டு வரைகூடப் போவதில்லை—போகின்றன. விசேஷ சலுகை காட்டியாவது இந்த பஸ்கள் டவுன் பஸ் ஸ்டாண்டு வரை போய்வர ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நகரத்தைத் தொட்டு விட்டுப் போனாலே போதும். மற்ற வசதிகள் இருக்கலாம். இதற்காகச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமென்று சொல்வது தமிழகத்தின் வேறுபல எல்லைகளுக்குள் பல்வேறு சங்கடங்களை உண்டாக்கும் என்பதனால் இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: மதுரையில் நடக்கும் டி.வி.எஸ். டவுன் பஸ் சர்வீஸ் நஷ்டத்தில்தான் நடப்பதாகச் சொல்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்குகிறபோது இந்த டவுன் சர்வீசை கடைசியாக எடுத்துக்கொள்ள தீர்மானித்து—அதுவரை நடந்து கொண்டிருக்க வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாட்டுடமை ஆக்குவது என்பது வெறும் லாபத்தைக் கருதியல்ல. மக்களின் நன்மையைக் கருதித்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்றாலும் கூட மக்களின் நன்மையைக் கருதித்தான் நாட்டுமைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தேசியமயமாக்கப்பட்டவுடன் சென்னை நகரத்திற்குள் தனியார் பஸ்களை எப்படி வரமுடியாது செய்திருக்கிறோமோ அதுபோல மதுரைக்குள் தனியார் பஸ்கள் வாராதவாறு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அமைய இருக்கிற பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் அதைப்பற்றி விரிவான முறையில் யோசித்து என்ன முடிவு செய்கிறார்களோ அதன் படிதான் நடவடிக்கை எடுக்கவேண்டியதாக இருக்கிறது.

பழனியில் முடி எடுக்கும் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்

* 213 வினு—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இந்தாண்டு பழனி தேவஸ்தான போர்டு பழனியில் உள்ள முடி எடுக்கும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்து வந்ததை நிறுத்திவிடுமாறு முடிவு செய்யப்பட்டது என்பது உண்மையா ?

(இ) அந்தத் தொழிலாளர்களிடம் இருந்து அரசுக்கு மனு ஏதேனும் வந்ததா ?

(உ) ஆம் எனில், அதன் பேரில் என்ன முடிவு செய்யப் பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) வினுவிற்கு இடமில்லை.

1971 டிசம்பர் 9]

திரு. கே. என். குமாரசாமி: துணைத் தலைவர் அவர்களே, பழனியில் தேவஸ்தானத்திற்கும். முடி திருத்தும் தொழிலாளர் களுக்கும் 1968- ஆம் ஆண்டில் தகராறு ஏற்பட்டு, அதன்பேரில் ஒரு உடன்பாடு ஏற்பட்டு அவர்களுக்குப் போனஸ் கொடுப்பது என்பது ஒத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி அந்த ஆண்டு 1¼ லட்சம் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல இரண்டாண்டு போனஸ் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு போனஸ் கொடுக்க முடியாது என்கிறார்களாம். அவர்களுக்கு போனஸ் கொடுக்கும் கொள்கையை மீண்டும் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 1379-ஆம் பசலியில் அங்கே கிடைத்த முடிகளின் மூலம் வருமானம் 6 லட்சத்து முப்பதாயி ரத்து அறுநூறு ரூபாய். முடி திருத்தும் தொழிலாளர்கள் 436 பேர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு 1¼ லட்சம் அன்பளிப்பாகத் தரப்பட்டது. ஆனால் 1380 ஆம் பசலியில் வருமானம் இரண்டு லட்சத்து எண்பத்தையாயிரம் தான் எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் முதல் ஆண்டில் முடி களை வாங்கியது போல இந்த ஆண்டு வாங்கவில்லை. அதன் காரணத் தினால் இந்த ஆண்டு நபர் ஒன்றுக்கு 50 ரூபாய் அன்பளிப்பாகத் தரலாம் என்பதாக அறங்காவலர் குழுவினர் முடிவு செய்திருக் கிறார்கள். தொழிலாளர்கள் சார்பில் வழக்கும் தொடரப்பட்டிருக் கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க முடியாத தற்குக் காரணம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் முடிகளை ஆக்ஷனில் எடுத்துக்கொள்ளவில்லை, சென்ற ஆண்டு ஆக்ஷன் எடுத்துக்கொண்டவைகளே தேங்கி இருக்கிறது என்பதுதான். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஸ்டேட் டிரேடிங் கார்ப்ப ரேஷன் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, 1379 ஆம் பசலியில் வாங்கிய முடிகளே சரியான முறையில் வெளிநாட்டு ஏற்றுமதி செய்ய முடியாத காரணத்தினால் தேங்கிக்கிடக்கிறது என்பது உண்மை. அதன் காரணமாகத்தான் இந்தப் பசலியில் அவர்கள் முடி வாங்க முன்வரவில்லை. அதன்காரணமாக பொது ஏலத்தில் விடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. பொது ஏலத்தில் விட்டதன் மூலம் இரண்டு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபாய் தான் வந்தது. ஆகவே, ஒரு தொழிலாளருக்கு 50 ரூபாய் என்ற அளவில் அன்பளிப்பு வழங்க அறங்காவலர் குழுவினர் முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. சொ. காவேரிமணியம்: பழனியில் உள்ள முடிதிருத்தகம் தனியாருக்கு காண்டிராக்டுக்கு விடப்பட்டிருக்கிறதே, அதை வாங்கி தேவஸ்தானமே நடத்த முன்வருமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 1379 ஆம் பசலிக்குப் பிறகு யாரும் அதை சரியான தொகைக்குக் கோரவில்லை. இந்த ஆண்டு முதல் அதை தேவஸ்தானமே எடுத்து, தொழிலாளர்களுக்கு ஒரு தொகை கொடுக்க ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதை இன்னும் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: முடிதிருத்துவோர்களுக்கு தலைக்கு ரூ. 50 கொடுப்பதாகச் சொன்னார்கள். அது கொடுக்கப்பட்டுவிட்டதா? கொடுக்கப்படாமல் இருந்தால் எப்போது கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: போனஸ் இன்னும் கொடுக்கப்படவில்லை. மதுரை தொழிற் கோர்ட்டில் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: உதவி சபாநாயகர் அவர்களே, முன்பு முடி திருத்துவோர்களுக்கே அந்த முடிகள் சொந்தமானதாக இருந்தது. வெளி நாடுகளில் கிராக்கி அதிகமானவுடன் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அதை வாங்க முன்வந்தது. தற்போது அதன்மீது கிடைத்த வருமானம் முழுவதையுமே தொழிலாளர்களுக்குப் போனசாகக் கொடுக்க அரசு முடிவு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: அந்தத் தொழிலாளர்கள் முழுவதும் பாடுபட்டு அதனால் கிடைக்கின்ற முடிகளை—அவர்களுக்கே ஒரு விலையில் விற்றுவிட்டால் அதை அவர்கள் லாபத்தில் விற்றுக் கொள்வார்களே, ஏலத்தில் பிறருக்குக் கொடுப்பதைவிட அவர்களுக்கே கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்குச் சரியான கூலியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம், ஆகவே இப்படிச் செய்வதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி: முடிதிருத்தும் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதாகச் சொல்லப்பட்டதே, அது சர்க்கார் கையில் இருந்து கொடுக்கப்படுகிறதா? அல்லது கோவில் பண்டில் இருந்து தரப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: முடியை விற்பனை செய்வதன் மூலம் வருகிற வருவாயைக்கொண்டு தரப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்ற ஆண்டு ஆறுலட்சமாக இருந்த வருமானம் இந்த ஆண்டு 2 லட்சமாகக் குறைந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, முடி கொடுக்கிற

1971 டிசம்பர் 9]

பக்தர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறதா? அப்படிக் குறைந்திருந்தால் நமது அறநிலையத்துறையின் மூலம், வருபவர் களின் எண்ணிக்கையைப் பெருக்க கவனம் செலுத்துவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பக்தர்களின் எண்ணிக்கை குறையவில்லை. பெருகித்தான் இருக்கிறது. அம்மையார் அவர்களும் மேலும் பக்தர்களின் எண்ணிக்கை பெருக பிரார்த்தனை செய்து கொள்ளலாம். வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட முடிகளின் தேவை குறைந்திருப்பதால் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அவற்றை வாங்க இந்த ஆண்டு முன்வரவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் இந்தத் துறையிலே தலையிட்ட பிறகு தான் இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனிப் பட்டவர்கள் மனிதமுடி ஏற்றுமதி செய்யும்போது மனித முடிக்கு ஒருசமயம் அயல்நாடுகளில் நல்ல கிராக்கி இருந்தது. அந்தக் கிராக்கியைக் கண்டு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டது, இப்பொழுது மனித முடி பெருமளவில் தேங்கி, அங்குள்ள தொழிலாளர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக் கின்றன. ஆகவே, அங்குள்ள மனித முடி விற்றாலும், விற்கா விட்டாலும் அங்குள்ள தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டுமென்கிற ஏற்பாட்டைச் செய்ய அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மனித முடியை அவர்கள் எடுத்துக்கொள்ளாத காரணத்தால் பெருமள வில் தேங்கிக் கிடக்கிறது. இதை ஏலத்தில் விட வேண்டுமென்று கருதி, கடந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்தபோது, மிகக் குறை வான அளவிற்கு ஏலம் போனது; சரியான அளவில் ஏலம் கோராத தால் தேங்கிக் கிடக்கிறது. இதற்கிடையில் அங்குள்ள தொழி லாளிகளில் ஒரு பகுதியினர் தாங்களே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு சங்கம் அமைத்திருப்பதாகவும் அரசாங்கத்திற்கு ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்த மனுவைப் பரிசிலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

THIRU K. SUPPU : On a point of personal explanation, Sir நான் நேற்றைய தினம் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம். . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : If any hon. Member wants to give any explanation to this House, even personal explanation, he should have it in writing and send it to the Hon. Speaker first. After approval only, the hon. Member may give his explanation and especially for what happened yesterday.